# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண் 6/2014** **நாள் : 25/02/2014**

**பெறுநர்**
மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பார்ந்த தோழரே,

வணக்கம்.

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள்குழுக் கூட்டம 2014 பிப்ரவரி 23ல் சென்னையில் மாநில தலைவர் தோழர் கே. விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்ட சிஐடியு-வின் துணை பொதுச் செயலாளர் அகில இந்திய நிர்வாகிகள் கூட்ட முடிவுகளையும், வெண்மணி நிலைவாலய கட்டிடம் திறப்பு, பழிவாங்குதலுக்கு ஆளான மாருதி தொழிலாளர்களின் வழக்கு நிதி உதவியாக அளித்த விவரங்கள், 46வது இந்திய தொழிலாளர் மாநாடு நடைபெற உள்ளது. சம்மந்தமாகவும், அம்மாநாட்டில் சமவேலைக்கு சம ஊதியம், குறைந்தபட்ச ஊதியம் சம்மந்தமாக பேச உள்ளது பற்றியும், வரஇருக்கின்ற பாராளுமன்ற தேர்தல் சம்மந்தமாகவும், மின்ஊழியர் மத்திய அமைப்பின் உறுப்பினர் சேர்ப்பை விரைவுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில தலைவர் தனது உரையில் ஊதிய உயர்வு ஒப்பந்தம், நாடாளுமன்ற தேர்தல், மாநில பொதுக்குழு, வெண்மணி நினைவாலய திறப்பு சம்மந்தமாகவும் விளக்கினார்.

பின்னர் மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் சென்ற நிர்வாகிகள் கூட்டத்திற்கு பின்னர் மின் அரங்கத்தில் நடைபெற்ற ஊதிய உயர்வு ஒப்பந்தம், அதில் மின்ஊழியர் மத்திய அமைப்பின் பங்கு. ஊதிய உயர்வில் மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பினையொட்டியே பல மாற்றங்களை கொண்டு வந்து ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் இணைந்து நின்றது சம்மந்தமாகவும், ஊதிய உயர்வு நிலுவைத் தொகையில் நன்கொடை வசூலிப்பது சம்மந்தமாகவும் விளக்கியதோடு, இந்திய மின்ஊழியர் கூட்டமைப்பின் 30வது ஆண்டு நிறைவு விழா அதையொட்டி நடைபெற்ற அகில இந்திய விரிவடைந்த செயற்குழுகூட்டம், தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர்கள் அமைப்பின் டெல்லிக் கூட்டம், அதில் எடுக்கப்பட்ட முடிவான நாடு தழுவிய தர்ணாஇயக்கம், அதை தமிழகத்தில் நடத்துவது சம்மந்தமாகவும்.

மத்திய அமைப்பின் மாநில பொதுக்குழு, வெண்மணி நினைவாலய திறப்பு, கள உதவியாளர் பதவிகளை தொழில்நுட்பம் பயின்றவர்களை கொண்டு நிரப்பிடும் நடவடிக்கை, கணக்கீட்டாளர் 2ம் நிலை, தொழில் நுட்ப உதவியாளர், உதவிபொறியாளர் ஆகியோர்களை பணிக்கு அமர்த்த எடுத்த நடவடிக்கைகள் சம்மந்தமாகவும் விளக்கியதோடு, புதியதாக பணிக்கு அமர உள்ள ஊழியர்களை ஸ்தாபனபடுத்துவது சம்மந்தமாகவும் களப்பிரிவு ஊழியர்கள் பதவி உயர்வில் நீதிமன்ற தடை, அதை நீக்க நாம் எடுத்த நடவடிகை 10,500 மஸ்துார்களை கள உதவியாளர்களாக பணியமர்த்த வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகள் சம்மந்தமாகவும் விளக்கினார்.

**நிர்வாகிகள் விவாதத்திற்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.**

1. ஏற்பட்டுள்ள ஊதிய உயர்வு ஒப்பந்தம், அதில் நமது பங்கு, ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் மாநில பொதுக்குழுவிற்கு பின்னர் பொதுக்குழு முடிவுகளையும் விளக்கி சிறப்பு பேரவைகள் நடத்துவது. நன்கொடை வசூலில் ஊழியர்களிடம் கையொப்பம் பெறுவதில் முழுகவனம் செலுத்தி மார்ச் முதல் வாரத்திற்குள் ஊழியர்களிடம் விருப்பத்தை பெற்று திட்ட நிர்வாகத்திடம் அளித்திட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.
2. திட்டமிட்டவாறு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில பொதுக்குழுவை மார்ச் 15,16 தேதிகளில் நடத்துவதோடு, இதனையொட்டியே தோழர் ஜோதிபாசு நினைவு கருத்தரங்கத்தையும் வெற்றிகரமாக நடத்தி முடிப்பது.
3. வெண்மணி நினைவாலய கட்டிட திறப்பு விழாவில் திட்டமிட்டவாறு மின்வாரிய ஊழியர்களை திரளாக கலந்து கொள்ளச் செய்வது வெண்மணியின் வர்க்கப் போராட்டமும், அதனால் ஏற்பட்ட தியாக நிகழ்ச்சியை மின்வாரிய ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் 10,000 சிறுபிரசுரங்களை கொண்டு வருவது.
4. 2013 ஆம் ஆண்டு முடிந்துள்ள நிலையில் 2013 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை இறுதிப்படுத்த வேண்டும் என்ற அவசரத் தன்மையை உணர்ந்து மார்ச் முதல் வாரத்திற்குள் கிளைகள் சந்தா சேர்ப்பை இறுதிப்படுத்தி மாநில மைய்யத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.
5. கிளைகளின் 2011, 2012 ஆம் ஆண்டு உள்முகத் தணிக்கையை உடனடியாக முடிப்பது. தணிக்கையாளர்களின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் 2009-2010 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கையை முடிக்காத கிளைகள் இத்துடன் இணைத்து முடிக்க வேண்டும். மேட்டூர் மின்விநியோக வட்டம் 2009-10 ஆம் ஆண்டுகளின் கிளைக் கணக்கு தணிக்கை செய்யப்படாததை மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் கவலையோடு பரிசீலித்து அதை உடனடியாக முடிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.
6. களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வைத் தடுக்கும்விதமாக பெற்றுள்ள நீதிமன்ற தடையை அகற்றி பதவி உயர்வை உத்தரவாதப்படுத்துவது.
7. 10,500 மஸ்தூர்களுக்கு கள உதவியாளராக பதவிஉயர்வை பெற்றுத் தருவது.
8. வாரியத்தில் புதியதாக இணைய உள்ள களஉதவியாளர், கணக்கீட்டாளர் 2ம் நிலை, தொழில்நுட்ப உதவியாளர், உதவிப் பொறியாளர் ஆகியோர்களை நமது சங்கத்திற்கு கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபடுவது.

போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன. எடுத்த முடிவுகளை முழுமையாக அமல்படுத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

இணைப்பு

1. கிளைகளுக்கு தணிக்கை செய்ய வேண்டிய தணிக்கையாளர்களின் பெயர் பட்டியல்.
2. ஐடிஐ ஊழியர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் துண்டு பிரசுரம்

**கிளைச் செயலாளர்களின் கவனத்திற்கு**

மின்வாரியத்தில் காலியுள்ள கள உதவியாளர் பதவிகளை நிரப்பிட 4000 தொழில் நுட்பம் பயின்றவர்களை மின்வாரியத்தில் பணிக்கு அமர்த்தும் உத்தரவும், 951 கணக்கீட்டாளர் 2ம் நிலைக்கான உத்தரவும் வெளியிடப்பட்டுள்ளது. புதியதாக தேர்வு செய்யப்பட்ட கள உதவியாளர்கள் (ஐடிஐ) அனைவருக்கும் மின்ஊழியர் மத்திய அமைப்பின் சார்பாக வாழ்த்தும்-வரவேற்பும் மடல் அனுப்பப்பட்டுள்ளது. தேவையான உதவியை பெற கிளைச் செயலாளர்களின் அலைபேசி எண்ணும் கொடுக்கப்பட்டுள்ளது. புதிய தோழர்கள் தொடர்பு கொள்ளும் போது அதை கிளைச் செயலாளர் இன்முகத்தோடு வரவேற்று வேண்டிய உதவிகளை செய்து அவர்களை ஸ்தாபனப்படுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

2011, 2012, 2013 ஆம் ஆண்டிற்கான கிளைகளுக்கு ஒதுக்கப்பட்ட தணிக்கையாளர்கள்

**சென்னை வடக்கு மண்டலம்**

| | | |
|---|---|---|
| 1. | வடசென்னை | எம். வெங்கடேசன் |
| 2. | மத்திய சென்னை | எஸ். ராஜேந்திரன் |

**சென்ன தெற்கு மண்டலம்**

| | | |
|---|---|---|
| 3. | மேற்கு சென்னை | ஆர். சிவராஜ் |
| 4. | தென்சென்னை | டி. பழனிவேல் |
| 5. | செங்கல்பட்டு | எம். தனலட்சுமி |

**வேலூர் மண்டலம்**

| | | |
|---|---|---|
| 6. | காஞ்சிபுரம் | கே. அருள்செல்வன் |
| 7. | வேலூர் | கே. அம்பிகாபதி |
| 8. | திருப்பத்தூர் | தி. அறிவழகன் |
| 9. | தர்மபுரி | ஈ. அந்தோணி |

**விழுப்புரம் மண்டலம்**

| | | |
|---|---|---|
| 10. | விழுப்புரம் | டி. ஜெய்சங்கர் |
| 11. | கடலூர் | ஏ. பழனி |
| 12. | திருவண்ணாமலை | கே. ரவிச்சந்திரன் |

**திருச்சி மண்டலம்**

| | | |
|---|---|---|
| 13. | பெரம்பலூர் | D. ஸ்ரீதர் |
| 14. | திருச்சி/மாநகர் | ஏ. வீரண்ணன் |
| 15. | கரூர் | ஜி. மோகன்ராஜ் |
| 16. | புதுக்கோட்டை | எஸ். ஆனந்தன் |
| 17. | தஞ்சாவூர் | எச். ஜான்சௌந்தரராஜ் |
| 18. | நாகப்பட்டிணம் | ஆர். ரவிக்குமார் |

**மதுரை மண்டலம்**

| | | |
|---|---|---|
| 19. | மதுரை | எம். பன்னீர்செல்வம் |
| 20. | மதுரை மாநகர் | ஜி. ராமகிருஷ்ணன் |
| 21. | தேனி | பி.கே. சிவக்குமார் |
| 22. | ராமநாதபுரம் | டி. கோபாலகிருஷ்ணன் |
| 23. | சிவகங்கை | து. கோவிந்தராஜு |
| 24. | திண்டுக்கல் | வை. பாலசுப்பிரமணியன் |

**திருநெல்வேலி மண்டலம்**

| | | |
|---|---|---|
| 25. | விருதுநகர் | R. ஸ்ரீதர் |
| 26. | திருநெல்வேலி | கே. விஜயன் |
| 27. | தூத்துக்குடி | வி. இளங்கோ |
| 28. | கன்னியாகுமரி | ஆர். குருவேல் |

| | | |
|---|---|---|
| **கோவை மண்டலம்** | | |
| 29. | நீலகிரி | ஐ.எம்.ஆர். கணேசன் |
| 30. | கோவைதெற்கு | சி. ஜோதிமணி |
| 31. | கோவைவடக்கு | எஸ். வண்ணமுத்து |
| 32. | கோவை மாநகர் | எஸ். வண்ணமுத்து |
| 33. | திருப்பூர் | து. கோவிந்தராஜு |
| 34. | உடுமலைபேட்டை | ஆர். சிவராஜ் |
| **ஈரோடு மண்டலம்** | | |
| 35. | சேலம் | எஸ். ராஜேந்திரன் |
| 36. | மேட்டூர் | வி. மதுசூதனன் |
| 37. | ஈரோடு | கே. ரவிச்சந்திரன் |
| 38. | கோபி | ஏ. பழனி |
| 39. | நாமக்கல் | ஈ. அந்தோணி |
| **அனல் மின்நிலையங்கள்** | | |
| 40. | வடசென்னை அனல் | எம். வெங்கடேசன் |
| 41. | எண்ணூர் | எம். தனலட்சுமி |
| 42. | மேட்டூர் அனல் | கே. அருள்செல்வன் |
| 43. | தூத்துக்குடி அனல் | வி. இளங்கோ |
| **புனல் மின்நிலையங்கள்** | | |
| 44. | ஈரோடுஉற்பத்தி | வி. மதுசூதனன் |
| 45. | காடம்பாறை | ஆர். குருவேல் |
| 46. | குந்தா உற்பத்தி | எச். ஜான்சௌந்தராஜ் |
| 47. | நெல்லைஉற்பத்தி | கே. விஜயன் |
| 48. | காற்றாலைபண்ணை | |
| 49. | பொதுகட்டுமான ம் | டி. அறிவழகன் |
| 50. | தலைமையகம் | |
| 51. | பொறியாளர் அமைப்பு | |